# திட்டம் 2013 – 2017

## முதியோர்களுக்கு உரிமை அளித்தலும், இணைத்தலும

ஹார்மணி ஹோல் நிலையம் எமது புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளோம். இத்திட்டம் நிலையத்தின் வருகின்ற மூன்று அரை வருடகாலத்தின் பாதையைத் தரும். எமது திட்டம், சேவைகளைப் பெறுவோரின் கருத்துக்களுடனும்,நிர்வாக சபை அங்கத்தவர்களின வழிநடத்தலுடனும் நிலையத்தின குறிக்கோளான, முதியோர்களுக்கு உரிமை அளித்தலையும் இணைத்தலையும் குறிக்கும் முகமாக ஐந்து முன்னுரிமைகளுடன் உருவாக்கப்பட்டது.




## எமது முக்கியமான முன் உரிமைகள

**1. சேவைகளை நிர்வகித்தலும் வாய்ப்புகளை விரிவுபடுத்துதலும்**

எமது அடிப்படை நோக்கம், நாம் வழங்கி வரும் எமது சேவைகளையும் நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து அதே பரந்த நோக்குடன் வழங்குவது ஆகும்.
இது எமது போக்குவரத்து சேவைகள் தற்போதைய தரத்தில் வழங்கப்படுவதையும் உள்ளடக்கும். அத்துடன் புதிய கூட்டு முயற்ச்சிகளுடன் எமது அங்கத்தவர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் வழங்கும் சேவைகளில் வளர்ச்சியையும் நிலையத்தில் புதிய நிகழ்ச்சிகளை உருவாக்குவதையும் எதிர்பார்க்குறோம்.

**2. தீர்மானங்களை எடுக்கும் போது சேவைகளைப் பெறுவோர்களை பங்குபெறச்செய்தல்.**

நாம் தீர்மானங்களை எடுக்கும் போது, சேவை பெறுபவர்களை உட்படுத்துவதைத் தொடர்வோம். இது சேவைகளைப் பெறுவோரின் கருத்துக்களைப் பெறும் நடைமுறைகளை விரிவடையவும், திருத்தியமைக்கவும் செய்வதுடன், அக்கருத்துக்கள், எமது சேவைகளை வழங்கும் முறைகளில் நேரடியான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதையும் உள்ளடக்கும்.

**3. எமது இலக்கைத் அடைவதற்கு கூட்டுமுயற்சி மூலம் பயன்களையும் ஆற்றலையும் அதிகரிக்கச் செய்வோம்.**

எமது இலக்கை அடைவதற்கு உள்ளக கூட்டுமுயற்சியை உருவாக்கினால், அது ஒரு கருவியாக இருந்து, கூட்டுமுயற்சியினால் சேவைகளை பெறுபவர்களுக்கும், நிறுவனத்திற்கும் கிடைக்கும் பயன்களை மதிப்பீடு செய்யக்கூடியதாக இருக்கும். நாம் சமூகத்தில் கூட்டுமுயற்சியைப் பாரிய அளவிலும் ஊடகங்களுடனும் வளர்ப்பதுடன் பேணிப் பராமரிக்கவும் தொடர்ந்து செயற்படுவோம்.

**4. நாங்கள் தற்போதைய முதன்மை வருமானத்தை நிர்வகிப்பதுடன் தனிப்பட்ட வருமான வழிகளையும் அபிவிருத்தி செய்வோம்.**

நாம் தற்போதைய முதன்மை வருமானத்தை நிர்வகிப்பதன் மூலமாக அடிப்படையான தேவைகளுக்குரிய சேவைகளைப் பூர்த்தி செய்ய முன்னேற்பாடு செய்வோம். அத்துடன் மேலதிகமாக நிதி திரட்டுவதற்கு புதிய முயற்சிகளை எடுப்போம். இதில் வரையறைக்கு உட்படுத்தப்படாத நிதியும் அடங்கும்.

**5. எமது அமைப்புகளையும், உள்ளக முறைகளையும் அடிப்படை வசதிகளையும் மேம்படுத்துவோம்.**

நாம் எமது முயற்ச்சிகளை தொடர்ந்தும் செய்து, வரும் இடர்பாடுகளை எதிர் கொள்வதுடன் முறைகளையும், செயற்பாடுகளையும் மேன்மையாக்குவோம். நாம் எமது அலுவலர்களின் ஆற்றல்களை இணைத்து, எமது சேவைகளில் திடமான விளைவுகளை ஏற்படுத்துவோம்.